ISSN: 2394-7535

நியூ செஞ்சுரியின் உங்கள் நூலகம்
பல்கலைக்கழக மானியக்குழு (UGC) அங்கீகாரம்பெற்ற மாதஇதழ்

பன்னாட்டுக் கருத்தரங்கம் - 2022
முதுகலைத் தமிழ்த்துறை
சிறப்பிதழ்: ஜெயராஜ் அன்னபாக்கியம் மகளிர் தன்னாட்சிக் கல்லூரி
பெரியகுளம் - 625 601, தேனி மாவட்டம்.

# இலக்கியங்களில் இயற்கை



Scan Me

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,
41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
அம்பத்தூர், சென்னை - 600 050.
☎ 044 - 26251968, 26258410, 48601884
www.ncbhpublisher.in | email: info@ncbh.in

₹ 2300/-

93. இயற்கைப் பாதுகாப்பில் கொம்புகாரன் தெய்வம் 483
து.ஹரிகிருஷ்ணன் & முனைவர் நீலகண்டன்

94. பெருமாள் முருகன் புதினங்களில் இயற்கைவேளாண்மை 488
சா.ஜோஸ்வாமைக்கேல்தாஸ் & முனைவர் பிரபாவதிமேரிபாய்

95. கலித்தொகையில் இயற்கை 493
திருமதி.ஞ.கார்த்திகா & முனைவர் தனராசன்

96. இலக்கியங்களில் மலர்கள் 499
சு.முருகவேல் & முனைவர் சு.ரவி ஜேசுராஜ்

97. முல்லை நிலத்தாரின் வாழ்வியல் 505
த.நர்மதாதேவி

98. பாரதியார் கவிதைகளில் இயற்கை 511
செ.பவித்ரா & முனைவர் ஆ.மகாலட்சுமி

99. குறுந்தொகைகாட்டும் இயற்கை 516
முனைவர் அ.ஜான்சிமேரி

100. சோ.தர்மனின் சூல் புதினத்தில் வானிலை 521
இரா.பிரகாஷ்

101. குறிஞ்சி நிலமும் தொடக்ககால வேளாண்மையும் 524
மா.சிவசங்கரி & முனைவர் ஞா.ஸ்டீபன்

102. பத்துப்பாட்டில் உணவுமுறைகள் 529
த.சுபா & முனைவர் ச.ரா.பிரியா

103. பிள்ளைத் தமிழில் இயற்கை வாழ்வியல் 533
ந.தமிழரசி & முனைவர் ஆ.மகாலட்சுமி

104. வேள்பாரிநாவல் காட்டும் இயற்கைசார் வாழ்வியல் 540
பொன்.கனகா & முனைவர் செல்வலதா

105. சங்க இலக்கியத்தில் அஃறிணை உயிர்கள் 545
முனைவர் செ.சுனிதா

106. "Nature" in the Writings of William Wordsworth 552
B.Mary Suba

107. சங்கபெண்பாற்புலவர்களின் பாடல்களில் ஐந்திணை வளம் 556
முனைவர் ச.குருஞானாம்பிகா

108. தமிழர்களின் சுற்றுப்புறச்சூழல் சிந்தனைகள் 562
முனைவர் மு.சுபாஷினி

109. சிற்பியின் கவிதைவானில் இயற்கைப் பரிணாமமும் பிற இலக்கிய ஒப்பீடும் 568
நிறைஞர் ஹூ.சவரியம்மாள் & முனைவர் செ.ரெஜினா

110. சங்ககால கைவினைத் தொழில்களில் இயற்கையின் பயன்பாடு 573
முனைவர் அ.மீனா

111. அகநானூற்றில் தாவரங்களின் நிலைப்பாடு 578
முனைவர் த.க.ஜாஸ்மின்சுதா

112. பழந்தமிழ் இலக்கியங்களில் தானிய வகை உணவும் 582
முனைவர் கா.சங்கீதா

# 97. முல்லை நிலத்தாரின் வாழ்வியல்

த. நர்மதா தேவி,
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை,
என்.ஜி.எம் கல்லூரி,
பொள்ளாச்சி, தமிழ்நாடு, இந்தியா

## ஆய்வுச் சுருக்கம்

கற்புக்கு உரிய நிலமாக திகழக்கூடிய முல்லை நிலத்தாரின் நிலம் பற்றிய செய்திகளையும், செம்மண் தோற்றத்திற்கானக் காரணத்தையும், முல்லை நில மக்களின் பெயர்களையும், இயற்கை வேளாண்மை குறித்தும், இயற்கையோடு ஒன்றிய வழிபாடுகளையும், முல்லைத் திணைப் பாடல்களில் புலவர்கள் கையாண்டுள்ள இயற்கைச் சார்ந்த உவமைகளையும், இவ்வாறாக முல்லை நிலத்தாரின் வாழ்வியலுக்கு பின்புலமாக அமைந்த இயற்கையின் இன்றியமையா நுட்பக்கூறுகளை ஆராய்வதாக இவ்வாய்வு அமைகிறது.

## முன்னுரை

மனித வரலாற்றில் ஆரம்ப கால கட்டங்களில் மலைகளிலும், குகைகளிலும் வாழ்ந்த மனிதர்கள் மக்கள் தொகை பெருக்கத்தால் காட்டுப்பகுதியான முல்லை நிலத்தை நாடிச் சென்றார்கள். அவ்வாறு நாடிய நிலையில் அஃறிணை உயிர்களான விலங்குகளை பழக்கி வளர்க்கக் கற்றுக் கொண்டான். மனித இனத்தின் நாகரிக வளர்ச்சி முல்லை நிலத்தில் தோன்றியது எனலாம். அவ்வாறு முல்லை நிலத்தாரின் வாழ்வியலை பின்வருமாறு காண்போம்.

## நிலம்

தொல்காப்பியர் நிலத்தைப் பற்றிக் கூறும்போது கற்புக்கு உரிய நிலமாக கருதப்படும் முல்லை நிலத்தை முதன்மைப்படுத்தி,

"மாயோன் மேய காடுறை உலகமும்" (தொல்காப்பியம், பொருளாதிகாரம், நூ.05:01)

முதலில் முல்லை நிலத்தைக் கூறிய பின் மற்றைய நிலத்தை கூறுகிறார். இந்நிலத்திற்கு பெயர்க்காரணம் முல்லை மலரை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளதை காண முடிகிறது. மேலும் இந்நிலத்தில் செம்மண் பரந்திருந்ததை,

"செம்மணற் சிறுநெறி கம்மென வரிப்ப" (அகநானூறு,பா..345:17)

"செந்நிறப் புறவின் புன்மயிர்ப் புரவை" (நற்றிணை,பா..321:01)

மேற்கண்ட அடிகளின் வாயிலாக செம்மண் முல்லை நிலத்திற்கு உரியன என்பதனை அறிய முடிகிறது "செம்மண் பரந்திருத்தலின் இந்நிலத்தைச் செம்புலம் என்பர்" (பண்டைத் தமிழர் தொழில்கள், பக்.21) என்கிறார் வி.சி. சசி வல்லி. மேலும் முல்லை நிலத்தின் மரபுப் பெயர்களை பற்றி இல.செ. கந்தசாமி கூறுகையில் "முல்லை நிலத்தைப் புறவு என்றும், கொல்லை என்றும், கானம் என்றும் வழங்குவர்"(தமிழர் வேளாண்மை மரபுகள், பக்.66)

"செம்மண் வகைகள் அமிலத்தன்மையுடைய கருங்கல் பாறைகள், பழங்கால பாறைகள் உருமாறிய பாறைகள் போன்றவை காலப்போக்கில் சிதறுண்டு நொறுங்கியதால் உண்டானவை ஆகும். மலைச்சரிவுகளின் இருந்து மழை நீரினாலும், புவி ஈர்ப்பு விசையினாலும் இவை கீழே கொண்டு வரப்பட்டு மலை அடிவாரங்களில் பரவிக் கிடக்கின்றன. இவற்றில் இரும்பு ஆக்ஸைடு அதிக அளவில் உள்ளதால் இம்மண் சிவப்பு நிறத்துடன் இவை பொதுவாக இளகிய இயல்புடையது ஆகும்"(Wikipedia) மேலும் முல்லை நிலத்தை வன்புலம் என அழைக்கப்பட்டதை,

"வன் புலக் காட்டு நாட்டதுவே" (அகநானூறு,.பா.94:12)

மேற்கண்ட அடிகளால் அறியலாம்.

## பொழுது

பண்டையத் தமிழர்கள் பொழுதை இருவகையாகப் பிரித்துள்ளனர்.அவை சிறுபொழுது பெரும் பொழுது என்பர் அவ்வகையில் முல்லை நிலத்திற்குரிய பொழுதை பற்றி தொல்காப்பியர் கூறுகையில்,

"காரும் மாலையும் முல்லை" (தொல்காப்பியம், பொருளாதிகாரம், நூ. 06)

பெரும்பொழுது கார்காலம் ஆகும். அதாவது மழைப்பொழிவுக் காலம் (ஆவணி, புரட்டாசி) ஆகும். சிறுபொழுது ஆனது மாலை நேரம் அதாவது இரவு பொழுதின் முற்கூறு ஆகும். இவற்றை ஆராயும் போது இவற்றின் பின்புலத்தில் இயற்கையே இன்றியமையாத இடம் வைக்கிறது என்பதனை அறிய முடிகிறது.

**மக்கள்**

முல்லை நில மக்களை தொல்காப்பியர்,

"ஆயர் வேட்டுவர் ஆடூஉத் திணைப் பெயர
ஆவயின் வரூஉம் கிழவரும் உளரே" (தொல்காப்பியம், பொருளாதிகாரம், நூ.23)

மேற்கண்ட நூற்பாவில் ஆயர், வேட்டுவர் என வருவன முல்லை நிலத்தாரின் திணைநிலைப் பெயர்கள் ஆகும். மேலும் ஆயர்கள் தொன்மையான குடியை உடையவர்கள் என்பதனை

"தொல் இசை நட்ட குடியோடு தோன்றிய
நல் இனத்த ஆயர்ஞ்................" (கலித்தொகை,பா.104:05-06)

மேற்கண்ட அடிகளால் அறியலாம். மேலும் ஆயர்களுக்கு இவர்களின் தொழிலைத் தவிர பிற தொழில்கள் தெரியாது என்பதனையும், கையில் 'கொடுங்கோல்' வைத்திருந்ததை,

"புண் கண் மாலையோடு பொருந்தி கொடுங்கோற்
கல்லாக் கோவலர்................." (அகநானூறு,பா.74:15-16)

மேற்கண்ட அடிகளால் அறியலாம்.மயிலை சீனி வேங்கடசாமி முல்லை நிலத்தை பற்றி கூறுகையில் "முல்லை நிலத்து மக்களின் வாழ்க்கை, குறிஞ்சி நிலத்து மக்களின் வாழ்க்கையை விடச்சற்று உயர்ந்திருந்தது"என்கிறார். (பழங்காலத் தமிழர் வாணிகம்,பக்.04)

**கோவலர்களின் குழல்**

கோவலர்களின் குழலானது கொன்றை நெற்றால் செய்யப்பட்டதை,

"...................................கொன்றைக் கோவலர்
கொன்றை அம் குழலர் பின்றைத் தூங்க" (அகநானூறு,பா.54:10-11)

மேலும் கோவலர்கள் குழலில் இசைக்கப்படும் பண்ணானது ஆம்பற்பண் என்பதும், இக்குழல் இசையைத் தினந்தோறும் மாலையில் இசைத்ததை,

"................................ பல்வயின் கோவலர்
ஆம்பலந் தீங்குழல் தெளவிளி பயின்ற" (குறிஞ்சிப்பாட்டு,அடி:221-222)

மேற்கண்ட அடிகளால் அறிய முடிகிறது. மேலும்,

"இம்மென பெருங்களத்து இயவர் ஊதும்
ஆம்பல் குழலின் ஏங்கி" (நற்றிணை,பா.113:10-11)

மேற்கண்ட அடிகளால் போர்க்களத்தில் குழல் ஊதினர் என்பதனையும், அவை ஆம்பல் தண்டால் செய்யப்பட்டதை அறிய முடிகிறது. அடியார்க்கு நல்லார் ஆம்பல் பற்றிக் கூறுகையில் "ஆம்பல் என்பாரை மறுத்து, வெண்கலத்தால் ஆன குமுதவடிவாக அணைசு பண்ணிச் செறித்த குழல்"என்று குழலின் வடிவத்தை ஆம்பல் எனக் கூறுகிறார் (பத்துப்பாட்டு, உரையாசிரியர் முனைவர் வி. நாகராசன்,பக்.291).

இயற்கையில் கிடைக்கின்ற ஆம்பல் தண்டு, கொன்றை நெற்று ஆகியவற்றில் குழல் வடிவமைத்ததை அறிய முடிகிறது.

**வழிபாடு**

ஒவ்வொரு நிலத்திற்கும் ஒரு முதன்மையான தெய்வத்தை வழிபட்டதை இலக்கியங்களில் வழி அறிய முடிகிறது. அவ்வகையில் முல்லை நிலத்திற்கு தெய்வமாக விளங்குவது திருமால். திருமாலை தொல்காப்பியர் "மாயோன்" (தொல்.அகத்.நூ:05) என்ற சொல்லாட்சியில் குறிப்பிடுகிறார். மேலும் ஆயர்களை உயர்வாகக் கருதியதற்கு காரணம் "கிருட்டிணன் இவர்கள் குலத்தில் தோன்றினான் என்பதற்காகவே, இவர்களை உயர்வாக மதித்தனர்"(தமிழகச் சமூகப் பயன்பாட்டு வரலாறு,பக்.18) என்கிறார் கோ.தங்கவேலு. மாலைப் பொழுதில் நெல்லும் மலரும் தூவி வழிபட்டதை,

"நெல்லும் மலரும் தூஉய்க் கைதொழுது
மல்லல் ஆவணம் மாலை அயர" (நெடுநல்வாடை, அடி:43-44)

மேற்கண்ட அடிகளால் அறியலாம். மேலும் மாயோனின் கருநிறம்போல மலை காட்சியளிப்பதை,

"மாயோன் அன்ன மால்வரைக் கவாஅன்" (நற்றிணை, பா.32:01)

மேற்கண்ட அடிகளால் அறியலாம். மேலும் திருமாலின் குணங்கள் இயற்கையோடு ஒன்றியிருப்பதை,

"நின் தன்மையும் சாயலும் திங்கள் உள
நின் சுரத்திலும் வண்மையும் மாரி உள
நின் புரத்திலும் நோன்மையும் ஞாலத்து உள
நின் நாற்றமும் ஒண்மையும் பூவை உள
நின் தோற்றமும் அகலமும் நீரின் உள
நின் உருவமும் ஒலியும் ஆகாயத்து உள்" (பரிபாடல்,பா.04:26-31)

மேற்கண்ட அடிகளில் திருமாலின் குணங்கள் திங்கள், மாரி, உலகம், பூ, நீர், ஆகாயம் என இயற்கையோடு ஒன்றி இருப்பதை அறிய முடிகிறது.

**இயற்கை வேளாண்மை**

முல்லை நிலத்தில் கால்நடையின் சாணத்தை எருவாகப் பயன்படுத்தியதைப் போலவே காஞ்சி மரத்தின் பூக்களை எருவாக பயன்படுத்தியதை,

"காஞ்சித் தாது உக்கன்ன தாது எரு மன்றத்து"
(கலித்தொகை, முல்லைக்கலி, பா.08:60)
"உழவர் வாங்கிய கமழ்பூ மென்சினைக்" (குறுந்தொகை,பா.10:03)

மேற்கண்ட சான்றுகளை ஆராயும்போது சங்ககால வேளாண்மை இயற்கை வேளாண்மையாக இருந்ததை அறிய முடிகிறது.இன்றைய நவீன காலகட்டத்தில் இயற்கையை உரங்களை பயன்படுத்தாமல் செயற்கை உரங்களை பயன்படுத்துவதன் மூலம் ஏராளமான நோய்களும், நிலத்தின் இயற்கைத் தன்மையும் சீரழிகிறது.

**முல்லை நிலத்தாரின் குடில்**

முல்லை நில மக்கள் மேற்கூரையை வரகின் தாளால் வேய்ந்ததை,

"செறிகழிக் கதவின் கற்றை வேய்ந்த" (பெரும்பாணாற்றுப்படை,அடி149)

"கருவை வேய்ந்த கவின் குடிச் சீறூர்" (பெரும்பாணாற்றுப்படை,அடி191)

இயற்கையில் கிடைக்கின்றப் பொருட்களைக் கொண்டு குடில் அமைத்ததை அறிய முடிகிறது. இவற்றின் எச்சமாக இன்னும் கிராமப்புறங்களில் தென்னை ஓலை, பனை ஓலை போன்றவற்றால் மேற்கூரை வேய்ந்ததை காண முடிகிறது.

**கற்புக்கு உவமை**

ஐவகை நிலங்களில் கற்புக்குரிய நிலமாக கூறப்படுவது முல்லை நிலமாகும். அந்நிலத்திற்குரிய ஒழுக்கத்தைப் பற்றிக் கூறுகையில் "பிரிந்து சென்ற கணவன் திரும்பும் வரையிலும் மனைவி பொறுத்துக் கொண்டிருப்பாள். கணவனைப் பற்றி யாரேனும் பழிச்சொற்கூறினாலும் கடிவாள், மறுத்துரைப்பாள். கணவன் பிரிந்து சென்றதனால் உண்டான உள்ளத் துயரத்தை அடக்கிக் கொண்டிருப்பாள். இதுவே கற்புடைய காரிகையின் குணம் இத்தகைய நிகழ்ச்சிகளைக் கூறுவதே முல்லையொழுக்கம்; முல்லைத்திணை என்கிறார்" சாமி சிதம்பரனார் (தமிழர் வாழ்வும் பண்பாடும், பக்.09) அந்நிலத்தில் பெண்களின் கற்புக்கு உவமையாக அருந்ததியை உவமையாக கூறப்பட்டதை

"இருண்டு தோன்றும் விசும்பின் உயர்நிலை உலகத்து
அருந்ததி மறைய கற்பின்" (ஐங்குறுநூறு,பா.442:03-04)

இருண்டு காணப்படும் வானத்திலே தோன்றும் அருந்ததியை கற்பிக்கு உவமையாக்கப்பட்டுள்ளது. மேலும்

"வடமீன்போல் தொழுதேத்த வயங்கிய கற்பினாள்" (கலித்தொகை,பா.02:21)

மேற்கண்ட அடிகளில் அருந்ததியைப் போல எல்லோரும் தொழுது போற்றும்படி விளங்குகின்ற கற்பினை உடையவள் என்பதனை அறிய முடிகிறது.

நீர்க்கடிகாரம்

பழந்தமிழர்கள் நேரத்தை அறிய நீர்க்கடிகாரத்தை பயன்படுத்தியதை

"குறுநீர்க் கன்னல் இனைத்து" (முல்லைப்பாட்டு, அடி 58)

மேற்கண்ட அடிகளால் அறிய முடிகிறது.

## இயற்கைசார் புழங்குப்பொருட்கள்

பண்டையத் தமிழர்கள் இயற்கைசார் புழங்குப் பொருட்களை பயன்படுத்தியதை மெய்ப்பிக்கும் வகையில் அமைந்த பாடல்,

"வருவழி வம்பலர்ப் பேணி, கோவலர்
மழவிடைப் பூட்டிய குழாஅய்த் தீம்புளி
செவி அடை தீரத் தேக்கிலைப் பகுக்கும்" (அகநானூறு,பா.318:9-11)

உணவினை மூங்கிற் குழாயில் அடைத்து வைத்து, வழிப்போக்கர்களுக்கு தேக்கிலையில் அவ்வுணவினை இட்டு விருந்து படைத்ததை அறிய முடிகிறது. ஆனால் இன்றையக் காலகட்டத்தில் இயற்கைசார் புழங்கு பொருட்களை பயன்படுத்தாமல் பிளாஸ்டிக் பெட்டிகளும், சில்வர் காகிதங்களையும், வாழை இலையை தவிர்த்து, வாழையிலை போன்ற ஒருவித காகிதத்தையும் பயன்படுத்தி வருகின்றோம். அவற்றைப் பயன்படுத்துவதன் மூலம் அவை மக்காத தன்மையுடையதால் நிலத்தின் செழிப்பை பாழடையச் செய்கிறது. நிலத்தடி நீரும் பாதிப்புக்கு உள்ளாகிறது. மேலும் அவற்றை எரிப்பதால் டை ஆக்ஸின் கூடிய வாயுக்கள் வெளியேறி சுற்றுச்சூழல் பாதிப்படையச் செய்கிறது. தூய்மையற்ற காற்றை சுவாசிப்பதன் மூலம் ஏராளமான நோய்வாய்ப்பட்டு இருக்கின்றோம்.

### மத்து

முல்லை நிலத்தாரின் புழங்குப்பொருட்களில் இன்றியமையாததாக விளங்குவது மத்து எனலாம். மோரிலிருந்து வெண்ணெய்யைப் பிரித்தெடுக்க பயன்படுத்தப்பட்டவை மத்து ஆகும். இவை மரத்தால் ஆனவையாகும். மத்துக் கொண்டு வெண்ணையை பிரித்தெடுத்த செய்தியை,

"நாள் உரை மத்து ஒலி கேளாதோனே" (புறநானூறு,பா.257:13)

மேலும்,

"விளம்பரம் கமலும் கமஞ்சூற் குழிசிப்
பாசம்தின்ற தேய்கால் மத்தம்
நெய்தெரி யியக்கம் வெளிப்படுதல் முழங்கும்
வைகுபுலர் விடியல்" (நற்றிணை,பா.12:01-04)

விளம்பழத்தின் மணம் வீசும் தயிர் பானையில் கயிறுக் கொண்டு மத்தினை ஆட்டியதால் மத்தின் தண்டுப் பகுதி தேய்ந்து இருந்ததையும், அம்மத்தினைக் கொண்டு வெண்ணெய்யை அதிகாலையில் எடுத்த செய்தியை அறியமுடிகிறது.

மேலும் அதிகாலைப் பொழுதில் வெண்ணெய் எடுப்பதற்கான காரணத்தை,

"சுடுமண் தசும்பின் மத்தம் நின்ற
பிறவா வெண" (நற்றிணை,பா.84:06-07)

மண்ணால் செய்து சுடப்பட்ட தயிர்ப்பானையில் உள்ள தயிரை வெயில் நேரத்தில் மத்தால் கடைந்தால் வெண்ணெய் திரளாது. அதனாலே அதிகாலைப் பொழுதில் கடைந்த செய்தியினை அறியமுடிகிறது. இவற்றை ஆராயும்போது தொழிலின் நுட்பக் கூறுகளையும்,மேன்மையும் அறிந்து தொழிலில் ஈடுபட்டதை அறியமுடிகிறது. மேலும் தயிர் கடையும் ஒலி புலி உறுமுவது போல இருந்ததை,

"ஆம்பி வான்முகை யன்ன கூம்பு முகிழ்
உறையமை தீந்தயிர் கலக்கி..............." (பெரும்பாணாற்றுப்படை,அடி:156-157)

மேற்கண்ட அடிகளால் அறிய முடிகிறது.

### உறி

உறி என்பது தயிர், பால் முதலியவற்றை வைப்பதற்குப் பயன்படுத்துவர். மேலும் ஆநிரைகளை மேய்க்கச் செல்கையில், தன் உணவினை உறிக்கயிற்றில் வைத்து எடுத்துச் சென்றதை,

"இமிழ் இசை மண்டை உறியொடு தூக்கி
ஒழுகிய கொன்றைத் தீம்குழல் முயற்சியின்
வழூஉச் சொற் கோவலர், தத்தம் இன் பொழுதொடு
தோன்றிய கார் நனை வியன் புலத்தார்" (கலித்தொகை,பா.106:02-05)

கோவலர்கள் ஆநிரைகளை அகன்ற இடத்திற்கு மேய்க்கச் செல்கையில் இசை முழக்கம் மலையாட கருவியைத் தோளில் மாட்டிக்கயிற்றுடன் மாட்டித் தூக்கிக் கொண்டு, குழலிசையைப் பாடிக் கொண்டு தன் இன மக்கள் பேசும் மொழியை பேசிக்கொண்டு சென்றதை அறிய முடிகிறது.

### திரிமரம்

திரிமரம் என்பது அரிசி, உளுந்து, ராகி, பருப்பு, போன்ற தானிய வகைகளை அரைக்கும் கல்லாகும். இதனை இலக்கியங்களில் திருவை, திரிகை, திரி மரம் என்றெல்லாம் அழைக்கப்படுகிறது. ஆனால் கொங்கு வட்டாரப் பகுதிகளில் ராகிக்கல் என அழைக்கப்படுகிறது. இன்னும் இக்கற்கள் கிராமப்புறங்களில் காணப்படுகின்றன. ஆயர் மகளிர் பதமான பக்குவத்தில் காய்ந்த அரிசியைச் சுழலும் திருமரத்தின் துணையில் இட்டு பொடியாக்கியதை,

"..................................மனையோள்
ஐது உணங்கு வல்சி பெய்துமுறுக் குறுத்த
திரி மரம் உரல் இசை கடுப்ப" (அகநானூறு,பா.224:11-13)

மேற்கண்ட அடிகளால் அறிய முடிகிறது.

### உரல் உலக்கை

தானியங்களின் மேல் தோலை நீக்க பயன்படுத்தப்பட்டவை உரலும் உலக்கையும் ஆகும். உரல் ஆனது கல்லால் ஆனவையாகும். உலக்கை மரத்தால் ஆனவையாகும். ஆரம்ப காலகட்டத்தில் உரலானது நிலத்தில் குழித் தோண்டி பின்னர் அக்குழியில் சீரமைப்பு செய்து பயன்படுத்தியுள்ளனர். மேலும் சந்தன மரத்தால் செய்த உரலையும், யானைத் தந்தத்தால் செய்த உலக்கையும் பயன்படுத்தியதை,

"தகை கொண்ட ஏனலுள், தாழ் குரல் உரீஇ
முகைவளர் சாந்து உரல், முத்து ஆர் மருப்பின்
வகைசால் உலக்கை......................." (கலித்தொகை,பா.40:03-05)

மேற்கண்ட அடிகளின் மூலம் அறியமுடிகிறது. மேலும் பச்சை அவலை இடிக்க கரிய வயிரம் பாய்ந்த உலக்கையைப் பயன்படுத்தியதை,

"பாசவ லிடித்த கருங்கால் உலக்கை" (குறுந்தொகை,பா.238:01)

மேற்கண்ட பாடல் அடி மூலம் அறிய முடிகிறது. மேலும் வரகினை அறுவடைச் செய்து, அவற்றை பாறைகளில் குவியலாகக் குவித்து, பின்னர் அவற்றை மாடுகளைக் கொண்டு தாம்பு ஓட்டுவார்கள். அவ்வாறு தாம்பு ஓட்டும் போது வரகுத்தாளிலிருந்து வரகு தனியே உதிரும். அவற்றை எடுத்துக்கொண்டு போய், மகளிர் திருவையில் அரைத்து, பின் உரலில் நேம்பி தூய்மை செய்ததை,

"கவைக் கதிர் வரகின் கால் தொகு பொங்கழி
கவட்டு அடிப் பொருத பல் சினை உதிர்வை
அகன் கண் பாறைச் செவ்வயின் தெறீஇ,
வரி அணி பணைத் தோள் வார்செவித் தன்னையும்
பண்ணை வெண் பழத்து அரிசி ஏய்ப்ப,
சுழல் மரம் சொலித்த சுளகு அலை வெண் தாழ்
தொடி மாண் உலக்கை ஊழின் போக்கி
உரல் முகம் காட்டிய சுரை நிறை கொள்ளை" (அகநானூறு,பா.393:05-12)

மேற்கண்ட அடிகளால் பழந்தமிழர்களின் அறுவடைக்குப் பின் நிகழக்கூடிய வேலைகளையும், அவ்வேலைகளுக்கு திருவை, உரல் உலக்கை, புடைப்பதற்கு முறம் முதலிய இயற்கை சார்ந்த புழங்குப்பொருட்களை பயன்படுத்தியுள்ளதை அறிய முடிகிறது.

### முடிவுரை

ஒவ்வொரு தொழிலுக்கும் அடித்தளமாக விளங்குவது நிலஞ்சார் அமைப்பு முறை ஆகும். அவ்வகையில் காடும் காடு சார்ந்த பகுதியாக விளங்கக்கூடிய முல்லை நிலத்தாரின் வாழ்வியலோடு தொடர்புடைய இயற்கைச் சூழலையும், இயற்கைச் சார்ந்த புழங்குப் பொருட்களைப் பயன்படுத்தியுள்ளதையும், முல்லைத்திணை பாடல்களில் முதல், கரு, உரி, என இவற்றிற்கு இயற்கையே பின்புலமாக அமைந்துள்ளது என்பதனை காண முடிகிறது.

### தொகுப்புரை

1. காட்டுப்பகுதிக்கு உரிய மலராக முல்லை மலர் விளங்குவதால் இந்நிலத்திற்கு முல்லை நிலம் எனப் பெயர்க்காரணம் பெற்றிருப்பதை அறிய முடிகிறது.

பாறைகளின் சிதைவால் தோன்றியது செம்மண் என்பதனை அறிய முடிகிறது.

3. முல்லை நிலத்தார் தொன்மையானக் குடியைச் சார்ந்தவர்கள் என்பதனையும், இவர்களுக்கு இவர்களின் தொழிலைக் தவிர மற்ற தொழில்கள் தெரியாது என்பதையும் அறிய முடிகிறது.
4. வழிபாட்டின் போது இயற்கைச் சார்ந்த பொருட்களைக் கொண்டு வழிபட்டதை அறிய முடிகிறது.
5. நேரத்தை அறிய நீர்க்கடிகாரத்தை பயன்படுத்தியுள்ளதையும் அறிய முடிகிறது.
6. வன்புல வேளாண்மையில் இயற்கைச் சார்ந்த உரங்களைப் பயன்படுத்தியுள்ளதையும் அறிய முடிகிறது.
7. உவமைகள் கையாளும் போது புலவர்கள் இயற்கை சார்ந்தவற்றையே உவமையாக கையாண்டுயுள்ளதை அறிய முடிகிறது.
8. இவர்களின் வாழ்வில் பின்புலத்திற்கு இயற்கைச் சார் புழங்குப் பொருட்களைப் பயன்படுத்தியுள்ளதையும் அறிய முடிகிறது.

**மேற்கோள் நூல்கள்**


- சங்க இலக்கிய நூல்கள் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு
- இளம்பூரணனார் உரை-தொல்காப்பியம் பொருளதிகாரம், சாரதா பதிப்பகம், ராயப்பேட்டை சென்னை. முதல் பதிப்பு: 2005
- கந்தசாமி, இல.செ-தமிழர் வேளாண்மை மரபுகள், கலைச்செல்வன் பதிப்பகம், கோயம்புத்தூர், முதற்பதிப்பு:1987
- தங்கவேலு.கோ-தமிழகச் சமூகப் பண்பாட்டு வரலாறு, அமிழ்தம் பதிப்பகம், இராயப்பேட்டை, சென்னை-600014, முதற்பதிப்பு: 2002
- சசிவல்லி,வி.சி -பண்டைத் தமிழர் தொழில்கள் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை, முதற்பதிப்பு: 1989
- சாமி சிதம்பரனார்-தமிழர் வாழ்வும் பண்பாடும்,சாரதா பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு: 2017
- மயிலை சீனிவேங்கடசாமி-பழங்காலத் தமிழர் வாணிகம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட் அம்பத்தூர், சென்னை. ஆறாம் வகுப்பு: 2011